**A Report on the Faculty Development Programme on Revisiting the Examination system in thecurrent scenario**

The Internal Quality Assurance Cell (IQAC) of Nehru Memorial College(Autonomous), Puthanampatti conducted a one day Faculty Development Programme with the UGC Financial Assistance on "Revisiting the Examination System in the Current Scenario" for its staff members on 19 March, 2016.

Dr.T.Jayaprakasam, Principal of the college presided over the session. Dr.R.Thirumurugan, Controller of Examinations $_{(i/c)}$ of Bharathidasan University, Tiruchirappalli inaugurated the FDP. In his inaugural address, he presented a comprehensive view of the status of education in India and abroad. He highlighted the objectives of the 12$^{th}$ Five year plan of the government in the higher education sector viz.: i) deepening excellence, ii) achieving equal access to education iii) increasing the Gross Enrolment Ratio etc. He quoted from the National Policy on Education's initiatives to deemphasize the memorization and to introduce automations examination system.

Mr.K.Devarajan, Director(Rtd.) of School Education delivered an exclusive talk on "Technology enabled Examination System." He presented examples of difficulties encountered in processing the data, central valuation, entry of marks, and declaration of results. He explained in detail about the benefits of automation to address all the aforesaid difficulties. He interacted with the staff members and explained how to overcome the practical difficulties effectively.

Dr.K.T.Tamilmani, HoD of Engilsh delivered the welcome address. Dr.A.Venkatesan, IQAC Coordinator made all the arrangements for the program and proposed vote of thanks at the end. Ms.R.Lakshmi and Ms.P.Kalpana did the compeering.

# தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

திருச்சி ◆வியாழன் ◆மார்ச் 24 2016





புத்தனாம்பட்டி நேரு நினைவுக்கல்லூரியில் நடந்த ஆசிரியர் திறன் வளர்ப்பு கருத்தரங்கில் பாரதிதாசன் பல்கலை. தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் (பொறுப்பு) திருமுருகனுக்கு கல்லூரி முதல்வர் ஜெயப்பிரகாசம் நினைவு பரிசு வ ழங்கினார்.

## 'உலக அளவில் இந்தியக்கல்வி முறை பின்தங்கி உள்ளது'

### கல்லூரி கருத்தரங்கில் தகவல்

துறையூர், மார்ச் 24-

புத்தனாம்பட்டி நேரு நினைவுக்கல்லூரி தரக்கட்டுப்பாடு மையம், யு.ஜி.சி சார்பில் ஆசிரியர் திறன் வளர்ப்பு கருத்தரங்கம் நடந்தது. கல்லூரி முதல்வர் ஜெயப்பிரகாசம் தலைமை வகித்தார். கருத்தரங்கை பாரதிதாசன் பல்கலை தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் (பொறுப்பு) திருமுருகன் தொடங்கி வைத்து பேசியதாவது: உலக அளவில் இந்திய கல்வி முறை மிகவும் பின்தங்கியுள்ளது. மாணவர்களின் தேர்வு முறை மனப்பாடம் செய்து எழுதுவதே அதிகமாக உள்ளது. மாணவர்களின் அறிவு திறனை மேம்படுத்துவதில் தேர்வு முறையில் மாற்றம் செய்ய வேண்டியது அவசியம். பல்கலை மானிய குழுவும் மனித வள மேம்பாட்டுத் துறையும் பல திட்டங்களை அறிமுகப்படுத்துகின்றன. கல்லூரி ஆசிரியர்கள் புதுமையான தேர்வு முறைகளை சிந்தித்து செயல்படுத்த வேண்டும் என்றார். கருத்தரங்கில் பள்ளிக்கல்வி துறை முன்னாள் இயக்குனர் தேவராஜ் தேர்வு முறையில் தொழில் நுட்பத்தின் பங்களிப்பு பற்றி பேசினார். தொடர்ந்து அவர் தேர்வுக்குத் தேவையான மாணவர் புள்ளி விவரம், தேர்வு அட்டவணை, விடைத்தாள் திருத்தும் பணி, தேர்வு முடிவு வெளியீடு உள்ளிட்டப் பணிகளை தொழில் நுட்பத்தை பயன்படுத்தி மேம்படுத்துவது குறித்து செய்முறையாக விளக்கினார். மேலும் ஆசிரியர்களின் சந்தேகங்களுக்கு பதில் கூறினார். கருத்தரங்க ஏற்பாடுகளை மைய ஒருங்கிணைப்பாளர் வெங்கடேசன் செய்தார். முன்னதாக ஆங்கில துறைத்தலைவர் தமிழ்மணி வரவேற்றார். பேராசிரியை லட்சுமி, கல்பனா ஆகியோர் கருத்தரங்க நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினர்.

திருச்சி பதிப்பு - பக்கம் 8 24 மார்ச், 2016

FACULTY DEVELOPMENT PROGRAM ON "REVISITING EXAMINATION SYSTEM IN THE CURRENT SCENARIO" HELD ON 19 MARCH 2016

தினமணி

ஞாயிற்றுக்கிழமை, 20 மார்ச், 2016

## புத்தனாம்பட்டி கல்லூரி ஆசிரியர்களுக்கு கருத்தரங்கம்

**துறையூர், மார்ச் 19:** துறையூர் அருகே புத்தனாம்பட்டி நேரு நினைவு தன்னாட்சி கல்லூரி தர உறுதி மையத்தின் சார்பில் அங்கு பணிபுரியும் ஆசிரியர்களுக்கு திறன் வளர்ப்பு குறித்த கருத்தரங்கம் சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் டி. ஜெயப்பிரகாசம்தலைமைவகித்தார். இயற்பியல் துறை தலைவர் பேராசிரியர் எஸ். குமாரராமன், ஆங்கில துறை தலைவர் கே.டி. தமிழ்மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கருத்தரங்கின் முதல் அமர்வில் பாரதிதாசன் பல்கலைக்கழகத் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ) முனைவர் ஆர். திருமுருகனும், இரண்டாவது அமர்வில் பள்ளிக்கல்வி துறை இயக்குநர் தேவராஜனும் பேசினர். இவர்கள் அந்தந்த அமர்வில் கல்லூரி ஆசிரியர்கள் எழுப்பிய வினாக்களுக்கு விடை அளித்தனர். கல்லூரி தர உறுதி மைய ஒருங்கிணைப்பாளர் முனைவர் அ. வெங்கடேசன் நன்றி கூறினார்.